ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1802/1 - 2013 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2013.03.18

*1802 /1 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான எற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 (1) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (VII) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 122 ஆம் பிரிவின் மூலம் அகலவத்த பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அப்பிரதேச சபையினால் உருவாக்கப்பட்டு, இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப விதிகள் 2009, ஒ்றோபர் மாதம் 16 ஆந் திகதி நடைபெற்ற அகலவத்த பிரதேச சபையின் பொதுக்கூட்டத்தில் 7 : 9 இலக்க 9ஆவது கூட்டத்தீர்மானம் மூலம், நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான எற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 123 (1) ஆம் பிரிவின் பிரகாரம், குறிப்பிடப்பட்ட உப விதி மேல் மாகாண, மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் தொழில் வாய்ப்புகள், பொருளாதார மேம்பாட்டு மற்றும் வர்த்தக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,*
*சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண*
*நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் தொழில்*
*வாய்ப்புகள், பொருளாதார மேம்பாட்டு மற்றும் வர்த்தக*
*அமைச்சர்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*மேல் மாகாண முதலமைச்சு,*
*சிராவஸ்தி மந்திர,*
*கொழும்பு 7,*
*2013, பெப்புருவரி 26.*

**அகலவத்த பிரதேச சபை**

*முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகள் நகல்பிரதி*

*1. இச்சட்ட துணைவிதிகள், அகலவத்த பிரதேச சபையின் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான சட்ட துணை விதிகள் என அறிமுகப்படுத்தப்படுகின்றன.*

**கவனிக்க.**- *1801/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல.1801/ 43 ஆகும்.*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. இச்சட்ட துணைவிதிகள் சபையின் அதிகார எல்லைப் பகுதியினுள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தலை ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல் மற்றும் நிறுத்தி வைக்கும் இடங்களுக்காகக் கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பாக விதிக்கப்படுகின்றன.

3.(1) சபையின் அதிகார எல்லைப் பகுதியில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படவேண்டிய இடங்கள் மற்றும் முடியுமான ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கப்படவேண்டிய முச்சக்கர வண்டிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை சபையினால் நிறைவேற்றப்படக்கூடிய பிரேரணை அங்கீகார மூலம் தீர்மானிக்கப்படவேண்டியதுடன், அத்தீர்மானங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் நாட் தொடக்கம் அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிச்சயிக்கப்பட்ட ஒரு நாளிலிருந்து அமுலாகும்.

3. (2) மேலே 3 (1) ஆம் விதியின்படி தீர்மானிக்கப்பட்ட முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடங்கள் மற்றும் எண்ணிக்கை, திருத்தப்பட வேண்டுமெனச் சபைக்கு தோன்றினால், சபையின் தீர்மானத்தின் மூலம் அவ்வாறு செய்யப்பட முடியுமென்பதுடன் அது வர்த்தமானியொன்றில் வெளியிடப்பட்ட நாட் தொடக்கம் அல்லது அதில் குறிப்பிடப்பட்ட நிச்சயிக்கப்பட்ட நாளிலிருந்து அமுலாகும்.

3. (3) முச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படும் இடங்களைத் தீர்மானித்தல், அவற்றின் எல்லைகளைத் தீர்மானித்தல் மற்றும் அங்கு நிறுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் தொடர்பாக அல்லது அத்தீர்மானங்களைத் திருத்துவதற்காக முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டவர்களைக் கொண்ட குழுவின் விதந்துரைகளை சபை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. (4) 3 (1) ஆம் விதியின்படி முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கப்படவேண்டிய இடங்களை அடையாளங்கண்டு கொள்வதற்கான அறிவித்தல் பலகையொன்றை எல்லாத் தரிப்பிடங்களின் முற்பகுதியிலும் பொருத்தப்படவேண்டியதுடன் அவ்வறிவித்தல் பலகையில், தொடர்பான நிறுத்துமிடத்தின் குறியீட்டு எண் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3(2) ஆம் விதியின்படி தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிவித்தல் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

3. (5)தரிப்பிடத்தில் முச்சக்கர வண்டிகள் ஓர் ஒழுங்குமுறைப்படி நிறுத்தி வைக்கப்படவேண்டியதுடன், நிறுத்தி வைக்கப்படவேண்டிய முறை சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் நான்கு அங்குல அகலமான வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான கோடு ஒன்றினால் அடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. பிரதேச சபையினால், முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படுவதற்கு, இத்துணை விதியின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அனுமதிப்பத்திரமொன்றை தலைவரினால் வழங்கப்படுவதும் அதற்காகக் கட்டணம் விதித்து அறவிடுதலும் சட்ட பூர்வமானவையாகும்.

5. முச்சக்கரவண்டித் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலில் தரிப்பிடத்துக்கு ஆக அண்மையில் இட வசிப்பாளர்களுக்குரிய முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

6. (1) மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம், தனது நிரந்தரமான வதிவிடத்துக்கு மிக அண்மித்த முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படுவதற்காகப் பிரதேச சபையிலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்படவேண்டியதுடன், அதற்கான விண்ணப்பப்படிவம் 30 ரூபா பணம் செலுத்தப்பட்டு சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். இவ்விண்ணப்பத்திரக் கட்டணம் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின்படி காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்படலாம்.

6. (2) முச்சக்கர வண்டியைச் செலுத்துபவர் அதன் உரிமையாளர் எனின், அவரதும் செலுத்துபவர் வேதனத்துக்கு அமர்த்தப்பட்ட சாரதியொருவரெனின் அவரதும் உரிமையாளரினதும் கீழ்வரும் ஆவணங்களின் புகைப்படப் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவம் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(i) முச்சக்கர வண்டி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;

(ii) முச்சக்கர வண்டியின் பதிவுச் சான்றிதழ் ;

(iii) வாடகைச் சாரதியின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

6. (3) சபையின் அனுமதிப்பத்திரம் பெற்ற முச்சக்கர வண்டிகள் பற்றிய பதிவேடுடொன்று நடாத்திச் செல்லவேண்டியதுடன், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதும், அது பற்றிக் குறிப்பிட்டு சிவப்பு மையினால் அடையாளமிடப்படுதல் வேண்டும்.

6. (4) சபையினால் மாதாந்தம் அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறை அல்லது வருடாந்தமோ பெற்றுக்கொடுக்க முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்க முடியும்.

6. (5) செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் புகைப்படப் பிரதியொன்றைத் தெளிவாக வெளியே காணப்படக்கூடிய விதத்தில் முச்சக்கர வண்டியின் முன்பக்க கண்ணாடியில் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

6. (6) முச்சக்கர வண்டியில் பயணிகளுக்கு முச்சக்கர வண்டியின் வலது பக்கத்தினால் ஏறுவதற்கு அல்லது இறங்குவதற்கு முடியாத வகையில் தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6.(7) அனுமதிப்பத்திரம், முச்சக்கர வண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் பெயருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6. (8) அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தைப் புதுபித்துக் கொள்ளுதல் முச்சக்கரவண்டி உரிமையாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

6.(9) மேலே 6 (4) ஆம் உப பந்தியில் மாதாந்தமோ அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறை அல்லது வருடாந்தமோ விதித்து, அறவிடப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்படவேண்டியதுடன் அத்தீர்மானங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் திகதியிலோ அல்லது அதில் குறிப்பிடப்படும் நிச்சயிக்கப்பட்ட ஒரு திகதி தொடக்கம் செயற்படும் விதத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

6.(10) 4 ஆவது துணை விதியின்படி சபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்று இருந்தால் மட்டும், முச்சக்கர வண்டித் தரிப்பிடமொன்றுக்கு முச்சக்கர வண்டியொன்றை உட்செலுத்துதல் அல்லது அங்கு நிறுத்தி வைத்தல் கூடாது.

6.(11) வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று இருந்த போதிலும், பொலிஸ் அலுவலரொருவரினால் அல்லது தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் தற்காலிகமாக முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் இருந்து முச்சக்கர வண்டிகளை அகற்றுவதற்குக் கட்டளையிடப்பட முடியுமென்பதுடன், இவ்வனுமதிப்பத்திரம் அதற்குத் தடையாக இருக்கக்கூடாது.

7. தரிப்பிடமொன்றில் வேறு வாகனங்களை உட்செல்லுத்துதல் அல்லது நிறுத்தி வைத்தல் கூடாது.

8. தரிப்பிடமொன்றிற்கு முச்சக்கர வண்டிகள் உட்பிரவேசிக்கும் இடத்தில் அல்லது அதிலிருந்து வெளியாகும் இடத்துக்கு தடையேற்படும் விதத்தில் முச்சக்கர வண்டிகள் அல்லது வேறு வாகனங்களையோ நிறுத்தி வைக்கப்படக்கூடாது.

9. தரிப்பிடமொன்றில் முச்சக்கர வண்டியினை அகற்றிக் கொள்ளுதல் தொடர்பான ஏதும் பழுதுபார்த்தல் அல்லாமல், தரிப்பிடமொன்றினுள் வேறு எந்த விதமான பழுது பார்த்தல் செய்யப்படக்கூடாது.

10. எந்தவொரு முச்சக்கர வண்டியொன்றினை நிறுத்தி வைப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பது எந்தவொரு தரிப்பிடத்திற்கோ அந்த அனுமதிப்பத்திரம் தொடர்புடைய தரிப்பிடம் தவிர்ந்த வேறு எந்தவொரு இடத்திலும் கூலிப்பயணத்தை நோக்காகக் கொண்டு முச்சக்கர வண்டியொன்றினை நிறுத்தி வைத்தல் கூடாது.

11. அனுமதிப்பத்திரம் உள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடமொன்றில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள சாரதிகள் அந்த முச்சக்கர வண்டித் தரிப்பிடத்துக்கு, வெளியாட்களை அழைத்து வீணாகக் காலத்தை கழிப்பதற்கு இடமளித்தல் கூடாது.

12. தரிப்பிடமொன்றில் எவரேனும் ஒருவரினால் போதைப் பொருள் பயன்படுத்துதல் அல்லது துர்நடத்தையில் ஈடுபடுதல் அல்லது வேறு எந்த அழுத்தமான செயலில் ஈடுபடக்கூடாது என்பதுடன், அவ்வாறான செயல்களில் ஈடுபடுவதற்கு இடமளியாதிருப்பது, தரிப்பிடத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதிபெற்ற ஆட்களின் பொறுப்பாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெற்ற எவரேனும் ஒருவரினால் தரிப்பிடமொன்றில் கூடாத நடத்தையில் ஈடுபட்டதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பமொன்றில் அதனைப் பற்றி விசாரணையொன்றை நடாத்தி, உறுதிப்படுத்தப்படின், அவரது அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் சபைக்கு உண்டு.

14. தலைவர் அல்லது அவரால் குறிப்பிட்ட பணிக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது பொலிஸ் அலுவலர் ஒருவர் கேட்டுக் கொண்ட எச்சந்தர்ப்பத்திலும், செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் மூலப் பிரதியினை முச்சக்கர வண்டியின் சாரதி அல்லது உரிமையாளரினால் சமர்ப்பித்தல் வேண்டும்.

15. இத்துணை விதிகளில் ஏதேனும்மொரு ஏற்பாடுகளை மீறுவது தவறொன்றாகும் என்பதுடன், குறிப்பிட்ட அத்தவறு தொடர்பாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் எழுநூற்றி ஐம்பது ரூபாவுக்கு கூடாத தண்டமொன்றுக்கு உள்ளாக்கப்பட முடியும். குறிப்பிட்ட அம் மீறுதல், செய்யும் பிழை தொடர்ந்தும் செய்து கொண்டு செல்லும் சந்தர்ப்பமொன்றில் முறையான நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது குறிப்பிடப்பட்ட அம் மீறுதல் செய்யும் குற்றம் தொடர்பாக கவனத்தையீர்க்கும் எழுத்துமூலமான அறிவித்தலொன்று தலைவரினால் அல்லது அக்கருமத்திற்காக அவரிடமிருந்து அதிகாரம்பெற்ற அலுவலரொருவருக்கோ பொறுப்பளிக்கப்பட்டதன் பின்னரோ குறிப்பிட்ட குற்றம் மேலும் புரிந்துகொண்டு செல்லும் ஒவ்வொரு நாளுக்குமாகவும் இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு அதிகமாகாத மேலதிக தண்டப்பணத்தினால் தண்டிக்கப்படுவற்கு உள்ளாக்கப்படும்.

16. இச்சட்ட விதிகளில் முரண்பாடாக எதுவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் பிரேரணையொன்றின் மூலம் இச்சட்டம் திருத்தப்படுதல் அல்லது வலுவிலக்கச் செய்யப்பட்டுப் புதுச் சட்டமொன்றைத் தயாரித்தல் அல்லது வேறான துணைவிதிச் சட்டமொன்றை உருவாக்க முடியுமாக இருக்கும்.

17. பொருள்கோடல் -

"சபை" என்பது அகலவத்த பிரதேச சபையினையும் ;

''தலைவர்'' என்பதன் மூலம் அகலவத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

''தலைவரினால் உரிய பணிக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பதன் மூலம், தலைவரினால் அதிகாரமளிக்கப்படும் பிரதேச சபையின் எவரேனும் ஒரு அலுவலரையும் ;

''தலைவரினால் உரிய பணிக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பதன் மூலம் தலைவரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையில் நிரந்தரமான ஒரு பதவியை வகிக்கும் அலுவலர் ஒருவரையும் ;

''அதிகார எல்லை'' என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அகலவத்த பிரதேச சபையின் அதிகார எல்லைப் பிரதேசமும் ;

''முச்சக்கர வண்டி'' என்பது வாடகைப் பயணங்களின் எதிர்பார்ப்பில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டியொன்றையும் ;

''வாடகைச் சாரதி'' என்பது முச்சக்கர வண்டியைச் செலுத்தும் உரிமையாளர் அல்லது அவ்வண்டியைச் செலுத்துவதற்காக உரிமையாளரினால் ஈடுபடுத்தப்பட்டவரையும் ;

''தரிப்பிடம்'' என்பது, அகலவத்த பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்று மூலம் தீர்மானிக்கப்பட்ட முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தையும் ;

''மாதாந்தம்'' என்பது ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் முதலாந் திகதி தொடக்கம் அந்தந்த மாதத்துடன் தொடர்பான 28 நாட்கள் அல்லது 29 நாட்கள் அல்லது 30 நாட்கள் அல்லது 31 நாட்கள் கொண்ட மாதத்தையும் ;

''மூன்று மாதங்கள்'' என்பது மாதாந்தம் எனும் பொருள்கோடல் மூலம் கணக்கு உள்ள சனவரி 1 ஆந் திகதியில் தொடங்கி அண்மித்த மூன்று மாதப்படி என்ற வகையில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ;

''ஆண்டு தோறும்'' என்பது ஆண்டொன்றில் சனவரி 1 ஆந் திகதியிலிருந்து தொடங்கி திசெம்பர் 31 ஆந் திகதி முடியும் வரை பஞ்சாங்க ஆண்டொன்றையும் ;

''பொலிஸ் அலுவலர் ஒருவர்'' என்பது 53 ஆம் அதிகாரமாகிய 1865 ஆம் ஆண்டின் 16 இலக்க, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பொருட்கோடலையும் ;

''வேறு வாகனங்கள்'' என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின்படி அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பொருட்கோடலையும் ;

''பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்'' என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின்படி அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பொருட்கோடலையும் ;

''தொல்லை தரும் செயல்'' என்பது தொல்லைகள் கட்டளைச் சட்டத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள பொருட்கோடலையும் குறிக்கும் பொருள்படும்.

18. இத்துணை விதிகள் தமிழ், ஆங்கில மொழிச்சொற்கள் தொடர்பில் எவையேனும் முன்னுக்குப்பின் முரணான கருத்து ஏற்பட்டால் சிங்கள வாசகம் வலுவுடையதாக இருக்கும்.

**முதலாவது அட்டவணை**

3 (3) ஆம் துணை விதி

நியமிக்கப்படும் வீதிகள் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்

1. குழுவின் தலைவர் பிரதேச சபையின் தலைவராக இருக்க வேண்டியதுடன் செயலாளர் சபையின் வருமான நிர்வாகியாக இருத்தல் வேண்டும்.

2. பிரதேச சபையின் செயலாளரும் தொழில்நுட்ப அலுவலரும்.

3. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதியொருவர்.

4. மாகாண சம்பந்தமான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவர்.

5. களுத்துறை வீதிப்பயணிகள் அதிகார சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவர்.

6. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவர்.

7. சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களின் வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரிகள் அல்லது அவர்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவர் வீதம்.

*8. சபையின் அதிகார எல்லைக்குள் இருக்கும் முச்சக்கர வண்டிச் சங்கங்களின் பிரதிநிதியொருவர் வீதம்.*

**இரண்டாம் அட்டவணை**

*4 ஆம் துணை விதி*




7.

*13 சென்ரி மீற்றர் கொண்ட சுற்றளவுள்ள ஒரு வட்டம், பின்னணி பழுப்பு நிறமுள்ள நிறத்திலான பிரதேச சபையின் சின்னம் உள்ள மாதிரியில் உள்ளவாறு விடயங்கள் அடங்கிய ஒட்டுவாசகமாகும். (ஸ்டிக்கர்).*

**முன்றாம் அட்டவணை**

*6 (2) ஆம் துணை விதி*

*முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்து அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்*

1. (i) விண்ணப்பதாரியின் பெயர் :----.
   (ii) நிரந்தர வதிவிட முகவரி :----.
   (iii) வரி கொடுப்பனவு இலக்கம் :----.
   (iv) நிரந்தர வதிவிடத்துடன் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனம் :----.
   (v) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

2. (i) முச்சக்கர வண்டிப் பதிவிலக்கம் :----.
   (ii) செலுத்துபவர் உரிமையாளரா அன்றேல் கூலிக்கு அமர்த்தப்பட்ட சாரதியா என்பது :-
      (1) உரிமையாளரெனின், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.
      (2) கூலிக்கு அமர்த்தப்பட்டவர் எனின் :-
         (அ) சாரதியின் பெயர் :----.
         (ஆ) நிரந்தர வதிவிட முகவரி :----.
         (இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
         (ஈ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.

*3. அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கப்படும் முச்சக்கர வண்டித் தரிப்பிடம் :----.*

*4. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கப்படும் காலம் :-*
*ஒரு மாதம்/மூன்று மாதங்கள்/ஓர் ஆண்டு.*

*என்னால் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவையென்றும் ஏதும் விதத்தில் அத் தகவல்கள் பிழையானவையென்றும் உறுதிப்படுத்தப்பட்டால், எனது முச்சக்கர வண்டித் தரிப்பிட அனுமதிப்பத்திரம் முன்னறிவிப்பு எதுவுமின்றி இரத்துச் செய்யப்படுவதற்கு உட்படுவதோடு, பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளை நிறுத்தல் பற்றிய துணை விதியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்கும் இணங்குகின்றேன்.*

..............................................
*விண்ணப்பதாரியின் ஒப்பம்.*

*திகதி :........................*

*திரு./திருமதி ............................................................................................................... க்கு .................................... இலக்கம் ஆகிய முச்சக்கர வண்டியை ....................................... ஆகிய தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை .......................................... காலத்துக்கு வழங்குதலை அங்கீகரிக்கின்றேன்.*

.............................................
*தலைவர்,*
*அகலவத்தை பிரதேச சபை.*

*04- 02*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*